**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.24/2024**

**வாக்குமூலம்: வா.சா.2 – திரு.பழனிச்சாமி**

**03.07.2026 : சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. என்னுடைய மகள் பெயர் துர்கா தேவி என்றால் சரிதான். நான் விவசாயம் செய்து வருகிறேனா என்றால் இல்லை. என்னுடைய மகளை 1 ஆம் வாதிக்கு திருமணம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். எந்த வருடம் திருமணம் செய்து கொடுத்தேன் என்றால் சுமார் 12 வருடங்களுக்கு முன்பு திருமணம் செய்து கொடுத்தேன். எனது மகளை திருமணம் செய்து கொடுத்த பின்பு தான் வாதிகள் குடும்பத்தில் நடைபெறும் சங்கதிகள் தெரியும் என்றால் சொத்து பற்றிய விபரங்கள் தெரியாது. குடும்ப விபரங்கள் தெரியும். 27.9.1968 ஆம் தேதி உபய வாதிகள் ஏற்படுத்திய பாகவிஸ்தி பத்திரம் பற்றிய விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 02.12.2009 ஆம் தேதிய வாதிகள் குடும்பத்தில் ஏற்பட்ட பாக பாத்திய விடுதலை பத்திரம் பற்றிய விபரம் தெரியுமா என்றால் அதுப் பற்றி விபரம் தெரியாது.

2. தாவா சொத்திற்கான பட்டா 1 ஆம் பிரதிவாதி பெயரில் உள்ள விபரம் தெரியுமா என்றால் ஆவணங்கள் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் வாதிகள் குடியிருக்கிறார்கள் என்று தெரியும். வாதிகளின் தகப்பனாருக்கு வில்வாதம்பட்டி ஊரில் பூர்வீக வீடு இருந்ததா என்றால் இருந்தது. வாதிகள் குடும்பத்தார் அவர்கள் கிடைத்த பங்கு பாகத்தை விற்று கிரையம் செய்துவிட்டார்களா என்றால் சரிதான். அந்த வீட்டை விற்ற பிறகு தாவா சொத்திற்கு நிரந்தரமாக வந்து விட்டார்களா என்றால் அதற்கு முன்னரே குடிவந்து விட்டார்கள். வாதிகள் குடிபோவதற்கு முன்னரே தாவா சொத்தில் வாதிகள் மற்றும் 1 ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தோட்டத்து சாளையாக இருந்தது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வாதிகள் பெயரில் பட்டா பெற விண்ணப்பித்து அளக்க வரும் போது 1 ஆம் பிரதிவாதி தாவா சொத்தை அளக்கக் கூடாது என்று ஆட்சேபணை செய்தார் என்று நான் நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் அதைப் பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது.

3. வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விபரம் மற்றும் அங்கு நடந்த பைசல் விபரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்த

நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனது மருமகன் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரம் எனக்குத் தெரியும். படித்துப் பார்த்து தான் கையெழுத்து செய்தேன். மருமகனுக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.

Taken down by me in open court and read over to the witness in Tamil and acknowledge by him/her to be correct

APOORVA S Digitally signed by APOORVA S Date: 2026.07.03 14:36:55 +0530

District Munsif,
Palani.